**ச**ந்தனம் போல்
தேய்ந்தால் புகழுண்டு ;
சாக்கடையாகப்
பெருகினால்
போற்றுதற்கு
யாருண்டு?

**- முத்தமிழறிஞர் கலைஞர்**



## 2011 - 16ஆம் ஆண்டுகளில் சட்டப் பேரவைக்கு முத்தமிழறிஞர் கலைஞர் வருகை!

## பேரவையில் த.வெ.க. உறுப்பினரின் உண்மைக்கு மாறான கூற்று!

# முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி கடும் எதிர்ப்பு!

## அவரது கோரிக்கையையேற்று – த.வெ.க. உறுப்பினரின் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கம்!

**சென்னை, ஆக. 31-**

**சட்டப் பேரவையில் பேசிய சோழவந்தான் தொகுதி த.வெ.க. உறுப்பினர் கருப்பையா, 2011-2016ஆம் ஆண்டுகளில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவைக்கு வருகை தந்தது குறித்து - ஒரு உண்மைக்கு மாறான கூற்றைக் கூறினார். அப்போது அதனைக் கழக உறுப்பினர் அர.சக்கரபாணி, கடுமையாக மறுத்தும், உண்மையை விளக்கியும் பேசினார்.**

**"அவைக்கு உண்மைக்கு மாறான தகவல் தந்த சோழவந்தான் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் கருப்பையாவின் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்" என அர.சக்கரபாணி விடுத்த வேண்டுகோளை பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகரன் அவர்கள் ஏற்று த.வெ.க. உறுப்பினரின் அக்கூற்றினை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி உத்தரவிட்டார்.**



அர.சக்கரபாணி பேசியதாவது :-

உறுப்பினர் சோழவந்தான் கருப்பையா பேசும் போது, 2011 - 2016ஆம் ஆண்டுகளில் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். ஆனால் சட்டப் பேரவைக்கு அவர் வரவில்லை என்றும் - எனக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லவில்லை என்றும் சொன்னார்.

அந்த நேரத்தில் நான் தி.மு.க. கொறடாவாக இருந்தேன். அப்போது கலைஞர் அவர்கள் வீல் சேரில்தான் வர முடியும். அவருக்கு பேரவையில் உரிய வகையில் இருக்கை ஒதுக்கித் தருமாறு அப்போதைய பேரவைத் தலைவரிடம் நான் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அவர் ஒதுக்கித் தரவில்லை. அதனால் கலைஞர் அவர்கள் வந்தாலும் பேரவைக்குள் வர முடியவில்லை. எனவே வருகைப் பதிவேட்டில் கலைஞர் அவர்கள் கையெழுத்திட்டுச் செல்வார்கள்.

தலைவர் கலைஞர் அவர்களுக்கு உரிய முறையில் இருக்கை ஒதுக்காததால்தான் அவை நடவடிக்கைகளில் அவரால் பங்கேற்க முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் தவறான கருத்தை உறுப்பினர் சோழவந்தான் கருப்பையா சொல்லக்கூடாது, எனவே அவர் கூறிய அந்த வார்த்தைகளை பேரவைத் தலைவர் அவர்கள், அவைக் குறிப்பிலி ருந்து நீக்க வேண்டும்.

இவ்வாறு அர.சக்கரபாணி குறிப்பிட்டார்.

(உறுப்பினர் அர.சக்கரபாணி யின் கோரிக்கையை ஏற்று, உறுப்பினர் சோழவந்தான் கருப்பையா கூறிய அந்தக் கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக பேரவைத் தலைவர் அறிவித்தார்)

## அதிகார அத்துமீறல்!

# அமைச்சரின் மனைவிக்கு 'டிரான்ஸ்பர்'!

## ஆசிரியர்கள் கொந்தளிப்பு!

சென்னை, ஆக. 31-

நீதிமன்ற உத்தரவை மீறி சட்டத் துறை அமைச்சரின் மனைவிக்கு மாறுதல் பணி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஆசிரி யர்கள் கொந்தளித்துள்ள னர்.

அரசு தொடக்க, உயர் நிலை, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, 'எமிஸ்' தளம் வழியாக, பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படுவது வழக்கம்.

நடப்பாண்டுக்கான பணியிடமாறுதல் கலந்தாய்வுகள், ஜூன் மாதம் நடப்பதாக இருந்தன.

நீதிமன்ற உத்தரவுகளால், ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு பணிகள் நிறுத்தப்பட்டன.

இந்த சூழலில், சென்னையை அடுத்த பல்லாவரம் மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில், அறிவியல் ஆசிரியையாக பணியாற்றிய, சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமாரின் மனைவிக்கு மட்டும், திருவல்லிக் கேணி அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளிக்கு மாற்றுப்பணி வழங்கப்பட்டது. இது, ஆசிரியர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அமைச்சரின் அரசு இல்லம், சென்னை பசுமை வழிச்சாலையில் இருப்பதால், இந்த பணி மாறுதல் வழங்கப்பட்டதாக விமர்சனம் எழுந்தது.

**கூடுதல் சுமைகள்**

இந்நிலையில், அமைச்சர் நிர்மல்குமாரின் மனைவி, ஏற்கனவே பணியாற்றிய பள்ளியில், அவருக்கு மாற்றாக ஆசிரியர் நியமிக்கப்படவில்லை. இதனால், அப்பள்ளியில் கற்றல் பணிகள் பாதிக்கப்பட்டு கூறப்படுகிறது.

இதுகுறித்து, ஆசிரியர்கள் கூறியதாவது:-

மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில், மாணவர்கள் அதிகளவில் படித்து வருகின்றனர். மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் அந்த பள்ளியில் குறைவாகவே உள்ளது. ஆசிரியர்களுக்கு கூடுதல் சுமைகள் உள்ளன.

இந்த சூழலில், அமைச்சரின் மனைவிக்கு மாற்றாக புதிய ஆசிரியரை, அந்த பணியிடத்தில் இரண்டு மாதங்களாக நியமிக்காமல் உள்ளனர். இதனால், மாணவர்களின் கற்றல் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வடகிழக்குப் பருவமழைக்கு முன்

# சென்னையில் வெள்ளத் தடுப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 31-


வடகிழக்குப் பருவ மழை தொடங்க உள்ள நிலையில், சென்னையில் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சட்டப் பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

சென்னையில் 3,014 கிலோ மீட்டர் அளவிற்கு மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த மழைநீர் வடிகால்கள் பருவ மழைக்கு முன்பாக மாநகராட்சியால் முழுமையாகத் தூர்வாரப்படுவது வழக்கம். பருவமழை தொடங்கிய பின்னர் டிசம்பர் மாதத்தில் மீண்டும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சேதமடைந்த சாலைகளை செப்பனிடுக!**

குறிப்பாக, சமூக ஆர்வலர்கள் மற்றும் தனியார் வானிலை ஆராய்ச்சியாளர்கள், மாறிவரும் எல் நினோ சூழல் காரணமாக 1997 மற்றும் 2015ஆம் ஆண்டுகளை விட சென்னையில் அதிக மழைப்பொழிவு ஏற்படக் கூடும் என்று எச்சரித்துள்ளனர்.



எனவே, சென்னையில் உள்ள கால்வாய்கள் மற்றும் முகத்துவாரங்களை முழுமையாகத் தூர்வாருவதுடன், சேதமடைந்த சாலைகளையும் செப்பனிட்டு பாதுகாக்க வேண்டும். இந்தப் பணிகள் அனைத்தும் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு சுமார் ரூ.2,000 கோடி அளவிற்கு இன்னும் தொகை நிலுவையில் இருப்பதாக அறிகிறேன்.

**வார்டு மேம்பாட்டு நிதி வழங்குவீர்!**

அதேபோன்று, மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதியும் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து மாமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து மாநகராட்சி கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

எனவே, அரசு உடனடியாக போதிய நிதியை வழங்கி, நிலுவையில் உள்ள மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகள், கால்வாய் தூர்வாரும் பணிகள் மற்றும் சாலை சீரமைப்புப் பணிகள் அனைத்தையும் வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் முடிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசினார்.

## வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி!

# ஒடிசா உள்ளிட்ட 3 மாநிலங்களில் மிக கனமழை!

## இந்திய வானிலை மையம் எச்சரிக்கை!

புதுடெல்லி, ஆக.31-

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியால், ஒடிசா உள்ளிட்ட 3 மாநிலங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வங்கக்கடலில் நிலவி வந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக, வடமேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு வங்கம் - வடக்கு ஒடிசா கடலோரப் பகுதிகளில், குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு ஒடிசா மற்றும் கங்கை மேற்கு வங்கப் பகுதிகளை கடந்து செல்லும் என்றும், இதன் காரணமாக, ஒடிசா, மேங்கு வங்கம் மற்றும் ஜார்க்கண்ட்டில் பெரும்பாலான இடங்களில் இன்று மற்றும் நாளை மிகக் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு வங்கக்கடல் மற்றும் ஒடிசா - மேற்கு வங்கம் கடலோரப் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு மணிக்கு 65 கிலோமீட்டர் வேகம் வரை பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இஸ்லாமியர்களின் முன்னேற்றத்திற்கும் - பாதுகாப்பிற்கும்

# எப்போதும் உறுதுணையாக இருக்கும் இயக்கம் தி.மு.க.!

## சட்டமன்றத்தில் சிவ.வீ.மெய்யநாதன் பெருமிதம்!

சென்னை, ஆக. 31-

சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மெய்யநாதன் பேசினார் அவர் பேசியதாவது-

இந்தியாவிலேயே சமூக நீதியை நிலை நாட்டிய மண் தமிழ்நாடு மண், நிலைநாட்டிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்,

இஸ்லாமிய மக்களுக்கு 3.5% இட ஒதுக்கீட்டை இந்தியாவிலேயே முதன் முறையாக வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

இஸ்லாமிய மக்களின் மீது தனி அக்கறை கொண்டு தமிழ்நாட்டில் உள்ள நூறு ஆண்டுகள் பழமையான ஐந்து பள்ளி வாசல்களை அதன் பழமை மாறாமல் புதுப்பிக்க 50 கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் கடந்த காலத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்திய தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்.



கபிஸ்தலங்களை பற்றி இங்கு குறிப்பிட்டார்கள், தமிழ்நாட்டில் எங்கெல்லாம் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கபிஸ்தலங்கள் கட்ட உத்தரவு பிறப்பித்த அரசு தி.மு.க. அரசு.

அதே போல் ஹஜ் யாத்திரை செல்லுபவர்கள் தங்கி செல்வதற்கு போதிய கட்டிட வசதி இல்லை என்றும், தங்க வசதி வேண்டுமென்று இஸ்லாமியர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ரூபாய் 40 கோடியில் கட்டிடம் கட்டித் தந்தவர் தளபதி முக ஸ்டாலின் அவர்கள்.

அதேபோல் தேவாலயங்கள் பள்ளிவாசல்கள் கட்ட 30 நாளில் அனுமதி தர வேண்டும் என்ற அரசாணை பிறப்பித்ததும், ஒருவேளை முப்பது நாளில் அனுமதி தரவில்லை என்றால் 31 வது நாள் அனுமதி தந்ததாக கருதி கட்டிடப் பணியை துவங்கலாம் என்ற அரசாணை பிறப்பித்ததும் தி.மு.க. ஆட்சி தான், இது போன்று இஸ்லாமியர்கள் முன்னேற்றத்திற்காக வும், பல்வேறு வகைகளிலும் இஸ்லாமிய இயக்கத்தை பாதுகாத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை பார்த்து இஸ்லாமியர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று கூறுவது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

இட ஒதுக்கீட்டை பொருத்தவரை 1989 ஆம் ஆண்டே 108 சாதிகளுக்கு 20 % இட ஒதுக்கீட்டை வழங்கி பெருமை படுத்தியவர் கலைஞர் அவர்கள்.

அதனைத் தொடர்ந்து வன்னிய சமுதாயத்திற்கு10.5 சதவீதம் இட ஒதுக்கீடு அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்தாலும் அதனைத் தி.மு.க. ஆட்சியிலும் தொடர்ந்தது. இது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, 10.5% இட ஒதுக்கீட்டை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிட்டது.

அவரை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து தி.மு.க. அரசு போராடியது, அப்பொழுது உச்சநீதிமன்றத்தில் எந்த தரவுகளின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது, என்று கூறி ரத்து செய்தது, மேலும் தற்காலிக தரவுகளின் அடிப்படையில் தான் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் அப்போதைய முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய பிரதமருக்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கடிதம் எழுதினார், அதனைத் தொடர்ந்து 26.10.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசு அனுப்பப்பட்டது, அதன் அடிப்படையில் ஒன்றிய அமைச்சரவை கூடி, 2029ல் மக்கள் தொகை கணக்கிடப்புடன் இணைந்து சாதி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது, அதன் அடிப்படையில் தான் தற்பொழுது புதிய அரசு பொறுப்பேற்றதும், ஆளுநர் அவர்கள் நிதி நிலை அறிக்கை படிக்கும் போது ஒன்றிய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் போது தமிழ்நாட்டிலும் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

இங்கு இந்த சட்டமன்றத்தில் ஒன்றை மட்டும் பதிய வைக்க விரும்புகிறேன். எந்த சூழ்நிலையிலும் வன்னிய சமூகத்திற்கு 10.5. % இட ஒதுக்கீடு வெற்றி பெற தி.மு.க. எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர் அவர் பேசினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டப் பிரதிநிதி ஆர்.நரேந்திர குமார் என்கிற ரஜினிபாபுவின் மகள் வழக்கறிஞர் ஹரிணி – சாய் எசஸ்வி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி திருவொற்றியூரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை வகித்தார். பகுதி செயலாளரும், மண்டல குழுத் தலைவருமான தி.மு.தனியரசு வரவேற்புரையாற்றினார். விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட கழக முன்னாள் செயலாளர் இரா.சௌந்திரபாண்டியன் அவர்களின் 96 வது பிறந்த நாளை முன்னிட்டு சௌந்தர பாண்டியன் அவர்களின் இல்லத்திற்குச் சென்று வாழ்த்துக்கள் தெரிவித்தார். வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன்! உடன் மாநகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.